1993 மார்ச் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இது போன்றதொரு திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்புகள்

(அ) சென்னையில் நடந்த பாரதீய ஜனதா கட்சிக் கூட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. அழகிரி அவர்களும், சென்னையிலே நடந்த பாரதீய ஜனதா கட்சிக் கூட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகள் பற்றிய பிரச்சினை எழுந்ததாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைப் பேரவையில் எழுப்ப அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கிறேன், திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தடை செய்யப்பட்ட அமைப்புகளாகிய வி. எச். பி., ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் போன்ற இந்த அமைப்புகள் தமிழகத்திலும் தடை செய்யப்பட்ட அமைப்புகள்தான். அவை முடக்கப்பட்டு விட்டன என்று நமது முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவிப்பும் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அமைப்புகளைச் சார்ந்தவர்கள் அறிவிப்பு அட்டைகளை, தங்களுடைய அடையாள அட்டைகளை செருகிக் கொண்டு, அந்த பாரதீய ஜனதா கட்சியினுடைய கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சார்ந்தவர்கள் அப்படிச் செயல்படுகிறபோது அங்கேயிருக்கின்ற போலீஸ்காரர்கள் அவர்களை அனுமதித்தது ஏன் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்டவர்கள் ஒரு இடத்திலே கூடுகின்றபோது என்னென்ன ஆபத்துக்கள் வருகின்றன என்பது நமக்குத் தெரியும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து குமரி அனந்தன் அவர்கள் **பற்றிய தகவலை இங்கே எழுப்ப இருக்கிறேன் என்று சொன்னார்கள். நீங்கள், 'அந்த அமைப்புகள் அங்கே கலந்து கொண்டிருக்கிறார்கள், நன்றி தெரிவித்துப் பேசியிருக்கிறார்கள்' என்ற அளவிலே நிற்பதுதான் சரியாக இருக்குமே தவிர, **என்றெல்லாம் கூறக்கூடாது. (குறுக்கீடு) அப்படி வருகிறபோது **இங்கே பிரச்சினை எழுப்புகிற நிலைமை வருகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது** என்ற தவறான தகவலைத் தருகிறார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கவேண்டுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. **என்கின்ற பிரச்சினை வருகிறது. மற்றபடி எந்தப் பிரச்சினையானாலும் நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

முற்பகல் 11-20

திரு. குமரி அனந்தன் : அதனாலே அந்த அமைப்புகள் அங்கே தங்களுடைய விருப்பம் போல செயல்படுவதற்கு அவர்கள் எப்படி போலீசாரால் அனுமதிக்கப்பட்டனர் என்பதோடு அந்த அமைப்புகளை சேர்ந்தவர்கள், எதாவது ஒரு கூட்டத்திலே கூடினால் பெரிய பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன அல்லவா? கும்பகோணத்திலே கூட வி.எச்.பி.யினர் சோற்று பொட்டலங்களை தூக்கி வீசிய காரணத்தினாலே எவ்வளவோ பெரிய குழப்பங்கள் வந்தன என்று துன்பங்கள் வந்தன என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். இந்த நிலையிலே அங்கே அவர்கள் இந்த மூன்று அமைப்புகளுடைய பெயர்களையும் குறிப்பிட்டு அமைப்பு ரீதியாகவே தங்களுக்கு ஒத்துழைத்ததற்கு நன்றி என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அமைப்பு செயல்படுவதை இந்த அரசாங்கம் அனுமதிக்கிறதா? இல்லையென்றால் எந்த துணிச்சலோடு அவர்கள் அதைச் சொன்னார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சென்னையில் பாரதீய ஜனதா கட்சி நடத்திய பொதுக் கூட்டத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு உதவி புரிந்ததாக இங்கே குறிப்பிட்டார்.

பாரதீய ஜனதா கட்சி சென்னையில் கடந்த 21–3–1993 அன்று நடத்திய பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. துரை என்பவர் தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார் என்ற செய்தி அரசின் கவனத்திற்கு அன்றைய தினமே கொண்டு வரப்பட்டது. அந்தத் தகவல் கிடைத்த உடன் அன்று 21–3–1993 இரவே காவல்துறையினர் இது குறித்து முழு அளவில் விசாரித்து உடனடியாக தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு, அரசுக்கு அது குறித்து அறிக்கை ஒன்றை அளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படின் அரசு அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் அரசைப் பொறுத்தமட்டில் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன என்பது குறித்து ஏற்கனவே இந்தப் பேரவையில் தெரிவித்து இருக்கிறேன். தடை செய்யப்பட்ட இயக்கங்களை இங்கே இயங்க அனுமதிக்கிறோம் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரம் அற்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). [illegible] ஆம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அடையாள அட்டைகளை சொருகிக் கொண்டு வந்தார்கள். காவல் துறையினர் ஏன் அனுமதித்தனர் என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் எழுப்பினார்கள். அத்தகைய தகவல் ஏதும் அரசுக்கு வரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மீண்டும் சொல்லுகிறேன்—தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் செயல்பட இந்த அரசு அனுமதிக்கவில்லை; அனுமதிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த பிரச்சினை, திருநெல்வேலி . .